திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1991 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 18 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

6. தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறித்து.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை இன்று ஒத்தி வைக்கப்பெற்று, மீண்டும் 2—2—1991 ஆம் நாள் சனிக்கிழமை 11-00 மணிக்குக் கூடலாம்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 2—2—1991 ஆம் நாள், சனிக்கிழமை காலை 11-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை 14-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

103. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 13—7—1990 ஆம் நாளிட்ட 321 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]